செய்தி வெளியீடு எண்:572 நாள் : 12.11.201

## செய்தி வெளியீடு

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் அவர்கள் தலைமையில் மீன்வளத்துறையின் திட்டங்கள் குறித்தான மாதாந்திர ஆய்வுக்கூட்டம் மீன்துறை ஆணையர் அலுலக மாநாட்டுக் கூடத்தில் இன்று (12.11.2014) நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசுச் செயலர் முனைவர் ச.விஜயகுமார், இஆப, மீன்வளத்துறை ஆணையர் டாக்டர் (திருமதி) பீலா ராஜேஷ், இஆப, மீன்வளத்துறை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமை அலுவலக மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் (கடல்வளம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆய்வுக்கூட்டத்தில் மீன்வளத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், குறிப்பாக கடல் மீனவர்களின் நலனுக்கென செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களான மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கான சிறப்பு நிவாரணத் திட்டம், கடல் மீனவர்களுக்கான தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் மற்றும் மீனவ மகளிருக்கென தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் ஆகியவற்றின் கீழ் மின்னனு பணபரிவர்த்தனை மூலம் உதவித்தொகை பட்டுவாடா செய்யப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தான விவரங்கள் மாவட்ட வாரியாக ஆய்வு செய்யப்பட்டது.

மேற்காணும் திட்டங்களின் கீழ் உரிய காலத்தில் மீனவ பயனாளிகளுக்கு பணப்பட்டுவாடா செய்தமைக்கு மீன்வளத்துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் பாராட்டினை தெரிவித்தார். மேலும், புதியதாக சேர்க்கப்பட்ட பயனாளிகளுக்கு விரைவில் பணப்பட்டுவாடா பணியினை முடித்திடவும் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் மீன்வளத்துறை அலுவலர்களான மண்டல மீன்துறை இணை இயக்குநர்கள், மீன்வளத்துறை துணை இயக்குநர்கள் மற்றும் மீன்வளத்துறை உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

மீன்வளத்துறை ஆணையர்

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9